***செயலர்***

| BIRTHDAY OF REV. FATHERS NOVEMBER - 2024 | |
|---|---|
| Fr. Martin Kandamparampil MST | 02 |
| Fr. Rocky Kulangara | 02 |
| Fr. Abilash Xavier Raj S | 16 |

| FEASTDAY OF REV. FATHERS-NOVEMBER- 2024 | |
|---|---|
| FR. MARTIN KANDAMPARAMPIL MST | 03 |
| FR.CHRISTUDAS M | 24 |

# மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு

**நலவாரிய அட்டை விண்ணப்பம்.**

தக்கலை மறை மாவட்ட பொதுநிலையினர் பணிக்குழுவின் மறை மாவட்ட அலுவலகமானது செப்டம்பர் 16, 2024 அன்று ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பொதுநிலையினர் பணிக்குழுவின் முதற்கட்ட பணியான நலவாரிய அட்டை பெற்று தரும் பணியானது முழு வீச்சில்



நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணி கல்லுவிளையில் அமைந்துள்ள நமது அலுவலகம் வழியாக நடத்தப்படுகிறது. 16 வயது முதல் 60 வயது வரை உள்ள அனைத்து தொழிலாளர்களும் இந்த நலவாரிய அட்டையை பெற்று பயன் பெறலாம். அரசிடமிருந்து பி.எஃப். பெறக்கூடிய தொழிலாளர்கள் தவிர மற்ற அனைத்து தொழிலாளர்களும் ஆண் பெண் பேதம் இன்றி இந்த நலவாரிய அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும். 150-க்கும் மேற்பட்ட தொழில்களை செய்யும் தொழிலாளர்கள் அனைவரும் இந்த அட்டையால் பயன்படலாம். கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம், மாதாந்திர ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், என பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வரப்படுகின்றன. இந்த உதவித்தொகை பெற வேண்டுமானால் கண்டிப்பாக தொழிலாளர்களுக்கு நலவாரிய அட்டை தேவைப்படுகிறது. ஆகவே மறைமாவட்டத்தில் உள்ள

அனைத்து மக்களும் நலவாரிய அட்டை பெற்று பயன்பட வேண்டும் என அன்பாக கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் இந்த நலவாரிய அட்டையை பெற்று பயன்பெறும் விதமாக நமது அலுவலக உதவியாளர் திருமதி செல்வராணி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது அலைபேசி எண்ணுக்கு (9443557530) தொடர்பு கொண்டு நலவாரிய அட்டைக்கு விண்ணப்பிக்குமாறும் சந்தேகங்களை கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நலவாரிய அட்டையை பற்றிய விழிப்புணர்வு கூட்டமானது அக்டோபர், 20, 2024 அன்று வயலங்கரை ஆலயத்தில் காலை 09:45 மணிக்கும் படந்தாலுமூடு ஆலயத்தில் காலை 10:15 மணிக்கும் நடைபெற்றது.

இவண்:
Adv. N. தனசிங் (Cell:9443449403)
தலைவர்.

## ஆலயத் திருப்பணியாளர்களுக்கான கருத்தரங்கு

மறைவட்ட அளவிலான திருப்பணியாளர்கள் கூட்டம் 30 செப்டம்பர் 2024 அன்று தொடங்கி மறைவட்ட வாரியாக நடைபெற்றது. தக்கலை-பிலங்கலை மற்றும் சூசைபுரம் மறைவட்டங்களுக்கான முதல் கருத்தரங்கானது சூசைபுரத்தில் நடைபெற்றது. 2024 அக்டோபர் 01 அன்று மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலயத்திலும், படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை மறைவட்டங்களுக்கான கருத்தரங்கு 02 அக்டோபர் 2024 அன்று படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்திலும் நடைபெற்றது. மஞ்சாலுமூடு மற்றும் களியல் மறைவட்டங்களில் 56 திருப்பணியாளர்கள், படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளையில் 63 திருப்பணியாளர்கள் கலந்துகொண்டனர். மொத்தம் 178 சிறுவர்கள் மற்றும் 10 பெண்கள் உட்பட 188 திருப்பணியாளர்கள் இக்கருத்தரங்குகளில் பங்கேற்றனர். ஒவ்வொரு கருத்தரங்கும் காலை 9:30 மணிக்கு தொடங்கி மாலை 4:00 மணி வரை நடைபெற்றது. இறையழைத்தல், சமூக ஊடகம், போதைப் பழக்கம் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகிய நான்கு தலைப்புகளில் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கிற்கு கருத்துரையாளர்களாக அருட். மிஜோ புத்தன்புரக்கல், அருட். ஜார்ஜ் கண்டத்தில் மற்றும் திருத்தொண்டர் அமன்டோ மற்றும் திருத்தொண்டர் அனூப் ஆகியோர் செயல்பட்டனர்.




மறைவட்டம் சார்பாக பங்குகளில் செயல்படும், மாதர் ஜோதிஸ் அலகுகளை சந்திக்கும் பணி நடைபெற்று வருகிறது. மறைவட்டப் பொறுப்பாளர்கள் இப்பணியை மேற்கொள்கின்றனர்.

**பார்வையிட்ட பங்குதளங்கள்**

**சூசைபுரம் மறைவட்டம்:** 1. சூசைபுரம், 2. மாங்கரை, 3. பாத்திமாபுரம், 4. கிள்ளியூர், 5. தக்காளிவிளை, 6. பாலப்பள்ளம், 7. பிலாங்கரை, 8. மாதாபுரம்.

**நித்திரவிளை மறைவட்டம்:** 1. வயலின்கரை, 2. வாறுதட்டு, 3. முஞ்சிறை, 4. கிறிஸ்துராஜபுரம்

**களியல் மறைவட்டம்:** 1. காரோடு, 2. பள்ளிகோணம், 3. மாறப்பாடி

**படந்தாலுமூடு மறைவட்டம்:** 1. படந்தாலுமூடு, 2. அதங்கோடு, 3. பளுகல்

## விவிலிய வசனம் எழுதும் போட்டி

அக்டோபர் 20, 2024 அன்று மாதர் ஜோதிஸ் இயக்கம் தாய்மார்களுக்கு "அஞ்சாதே" என்னும் தலைப்பில் விவிலிய வசனம் எழுதும் போட்டியானது நடைபெற்றது மறைவட்ட வாரியாக மறைவட்ட இயக்குநர் தந்தையர்களால் இது நடத்தப்பட்டது. இதில் சுமார் 200 தாய்மார்கள் பங்கேற்றனர்.

## மறைவட்ட ஊக்குவிப்பாளர்கள் கூட்டம்

### சூசைபுரம்

அக்டோபர் 20, 2024 அன்று சூசைபுரம் மறைவட்ட ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் கூட்டம் இயக்குநர் தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்த்தின் போது வரவிருக்கும் நிகழ்வுகள் பற்றி விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

### படந்தாலுமூடு

அக்டோபர் 3, 2024 அன்று படந்தாலுமூடு மறைவட்டப் பொறுப்பாளர்களின் கூட்டம் படந்தாலுமூட்டில் வைத்து நடைபெற்றது.

### பிறரன்புப் பணி

வீட்டில் பயன்படுத்தாமல் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் நல்லதுணிகளை சேகரித்து மறைத்தொண்டு தளத்திற்கு கொடுக்கும் பிறரன்புப் பணி மறைமாவட்ட அளவில் முன்னெடுக்கப்பட்டது. சேகரிக்கப்பட்டவை, செங்கோட்டை மறைத்தொண்டு தளத்தில் அருட்தந்தை. டென்சி அவர்களிடமும், விருதுநகரில் அருட்தந்தை அஜின் C அவர்களிடமும் ஒப்படைக்கபட்டது.

## சங்கனாச்சேரியில் மார் மேத்யூ காவுக்காட்டு நினைவு திருப்பலி



குமரியில் சீரோ மலபார் சபையின் நற்செய்திப் பணிக்கு முழு ஆதரவளித்து, அதைத் தொடங்கக் காரணமாக இருந்த, சங்னனாசேரி உயர் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மார் மேத்யூ காவுகாட்டு அவர்களின் நினைவு நாளான அக்டோபர் 3, அன்று ஆண்டுதோறும் அவரது கல்லறை அமைந்துள்ள ஆலயத்திற்குச் சென்று திருப்பலி ஒப்புக்கொடுத்து செபிப்பது வழக்கம். இவ்வாண்டு, ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் திருப்பலி கொண்டாடப்பட்டது. அருட்தந்தையர் ஜோஷி குளத்தும்கல், ஜினோய் தொட்டியில், ராபின்ஸ் குழிக்கோடில், சுபின் புத்தன்புரக்கல், மற்றும் லிஜு மறாட்டுகளம் ஆகியோர் இதில் பங்கேற்றனர். கலந்துக்கொண்டனர். களியல் மறைவட்ட ஆலயத்தை சேர்ந்த மூன்று பாடகர்கள் திருப்பலிக்கு உதவினர்.

## அருட்தந்தையர்களுக்கான வருடாந்திர தியானம்

அருட்தந்தையர்களுக்கான வருடாந்திர தியானம் 2024 அக்டோபர் 06 முதல் 11 வரை சங்கமத்தில் நடைபெற்றது. அருட். ஜோஸ் வரிக்காச்சேரில் SDB இந்த தியானத்தை நடத்தினார். இயேசுவின் குருத்துவத்தில் உள்ள பங்கேற்பை பாராட்டுவதோடு அதை ஆழமாக உணர்ந்து புனித வாழ்க்கையை வாழ அவர் அருட்தந்தையர்களுக்கு வழிகாட்டினார். குருத்துவ பணியின் புனிதத்தன்மை, அருட்தந்தையர் ஒற்றுமை, ஜெபத்தின் முக்கியத்துவம், நற்செய்தி மற்றும் கடவுளுடைய வார்த்தையின் வல்லமை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் மத்தேயு, லூக்கா நற்செய்தி மற்றும் திருத்துதர்கள் பணி ஆகியவற்றின் அடிப்படையில் அவர் வகுப்புகள் எடுத்தார்.




# வின்சென்ட்-தே-பவுல் சபை

## வட்டார சபை ஆண்டுவிழா-தென்காசி மறைத்தொண்டு தளம்

தென்காசி மறைத்தொண்டு தளத்தின் புனித வின்சென்ட் தே பவுல் சபையின் இரண்டாம் ஆண்டு விழா மேக்கரை புனித ஜார்ஜியார் ஆலயத்தில்



வைத்து அக்டோபர் 20, 2024 ஞாயிறு நடத்தப்பட்டது. மாலை 4 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்கு தென்காசி வட்டார சபையின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி ராஜேஷ் எம்.சி.பி.எஸ் அவர்கள் தலைமை தாங்கினார். அருள்பணி தோமஸ் தக்கலை, அருள்பணி ஆண்டணி மகேஷ் ஆகியோர் அதில் உடன்குருக்களாகப் பங்கேற்றனர்.

பின்பு ஆண்டு விழா பொதுக்கூட்டம் மாலை 6 மணிக்கு ஆன்மீக இயக்குநர் தலைமையில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் அருள்தந்தையர் தாமஸ் தக்கலை, ஜான் ஜோசப், மகேஷ் ஆண்டனி, பிரின்ஸ், அருட்சகோதரி செலிக்குரின், மத்திய சபை தலைவர் சகோதரர் ராபி, இணைச் செயலாளர் சகோதரர் ஜார்ஜ் வின்சென்ட் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். இக்கூட்டத்தில் தென்காசி வட்டார சபையின் செயலர் திருமதி ஸ்ரீஜா ராஜி ஆண்டறிக்கை வாசித்தனர். மேக்கரை கிளை சபையின் உறுப்பினர் சகோதரி ஜெபா செல்வராணி வரவேற்புரை வழங்கினார். இளைஞர் பிரதிநிதி சகோதரர்கள் செல்வன் ராமகிருஷ்ணன் மற்றும் பிரதின் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். இக்கூட்டத்தின் தென்காசி வட்டார சபையின் தலைவர் திரு சிஜூ ராஜா அவர்கள் நன்றி கூறினார். இறுதியில் ஐந்து மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்குதல் நடைபெற்றது. இதில் ஒருவருக்கு வீல் செயர், நான்கு பேருக்கு வாக்கிங் ஸ்டிக், பன்னிரண்டு குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இறுதியில் அன்பின் விருந்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

## வட்டார சபை ஆண்டு விழா- நித்திரவிளை

புனித வின்சென்ட் தே பவுல் சபை நித்திரவிளை வட்டார சபை ஆண்டு விழா அக்டோபர் 13, 2024 அன்று மதியம் 2 மணி அளவில் வாறுதட்டு ஆலயத்தில் நடைபெற்றது. வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையேற்று உரையாற்றினார்கள். வாறுதட்டு கிளை சபைகளின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ்




அவர்கள் நற்கருணை ஆசி வழங்கினார். ஆராதனையை அருட்சகோதரர் டிவின் அவர்கள் வழி நடத்தினார்கள். மத்திய சபைச் செயலர் சகோதரர் சோனிக் ரீகன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மத்திய சபையின் கல்வி அலுவலர் சகோதரர் வின்சென்ட் ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மத்திய சபையின் இணைத்திட்ட அலுவலர் சகோதரர் கிறிஸ்துதாஸ் ஆசிரியர் அவர்களும் கலந்து கொண்டார்கள். கூட்டத்தின் இடையிடையே கலை

நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்வின் போது, வாறுதட்டு கிளைச் சபை உறுப்பினர் சகோதரி சத்திய பிரபா வரவேற்புரையும், வட்டார சபை தலைவர் சகோதரர் லால் அவர்கள் நன்றியுரையும் வழங்கினர். விழா 4:30 மணி அளவில் முடிவுற்றது.

## சூசைபுரம் வட்டார சபை ஆண்டு விழா

சூசைபுரம் வட்டார சபையின் 26ஆவது ஆண்டுவிழா, பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் வைத்து வட்டார சபையின் ஆன்மீக இயக்குனர் பேரருள்தந்தை ஆண்டனி ஜோஸ் அவர்கள் தலைமையில் அக்டோபர் 13, 2024 ஞாயிறு மதியம் 2:30 மணிக்கு நடைபெற்றது. ஆண்டுவிழாவின்



பகுதியாக, ஒரு மணி நேர நற்கருணை ஆராதனை நடைபெற்றது.

பின்னர் நடந்தப் பொதுக்கூட்டத்தில், அருள்தந்தையர் அஜின் ஜோஸ், டோஜி, மத்திய சபை தலைவர் சகோதரர் றாபி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அருள்தந்தையர்கள் சாஜன், ஜிம்மி ஆகியோருடன் திருத்தொண்டர் சுனில் அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டார். மேலும் மத்திய சபையின் துணைத் தலைவர் சகோதரர் ஐயாத்துரை, திட்ட அலுவலர் சகோதரர் எட்வின்சன் மற்றும் வட்டார சபையின் முன்னாள் தலைவர் சகோதரர் லாரன்ஸ் ஆகியோரும் கூட்டத்தில் பங்கேற்றனர். கூட்டத்தில் வட்டார சபை தலைவர் சகோதரர் ஜாண் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். பொருளர் சகோதரர் ராபின் ஜோஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். கூட்டத்தில் நலத்திட்டங்கள் வழங்குதல், திட்டங்கள் வழங்குதல், கிளை சபையினர் ஒருங்கிணைத்த கலை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம் பெற்றன. அன்பின் விருந்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

## “தேசத்தோடு ஒரு நாள்“

தக்கலை மத்திய பேரவையின் சார்பாக "தேசத்தோடு ஒரு நாள்" என்னும் பெயரில் வருடம் தோறும் அக்டோபர் 2ஆம் தேதி நடைபெறும் துப்புரவு முகாம் இம்முறை இடைக்கோடு அரசு மருத்துவமனையில் நடைபெற்றது. மஞ்சாலுமூடு புனித குழந்தை தெராசா கிளை சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை மார்டின் கண்டம்பறம்பில் அவர்கள் இந்நிகழ்வை தொடங்கி வைத்தார். பின்னர் மத்திய சபை தலைவர் சகோ. றாபி மற்றும் துணை தலைவர்

சகோ. ஐயாதுரை அவர்கள் முன்நின்று வழிநடத்தினார்கள். தென்காசி புலரி சமூக சேவைசங்கத்தின் செயலர் அருட்தந்தை ஆண்டனி மகேஷ், மற்றும் மத்திய சபை பொறுப்பாளர்கள், கிளை சபை உறுப்பினர்கள் என 100க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தூய்மைப் பணியை மேற்கொண்டனர். மஞ்சாலுமூடு வட்டார சபை தலைவர் சகோ. ஜோஸ் மற்றும் துணைத்தலைவர் சகோ. ஜார்ஜ் வின்செண்ட் ஆகியோர் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

## சபை பாதுகாவலர் மற்றும் நிறுவன விழா களியில் கிளைச்சபை

களியில் புனித மரியன்னை கிளைச்சபை சார்பாக புனித வின்செண்ட் தே பவுல் திருவிழா செப்டம்பர் 29 அன்று கொண்டாடபட்டது.

## பாலப்பள்ளம் கிளைச்சபைகள்

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் செயல்படும் புனித வின்செண்ட் தே பவுல் சபை உறுப்பினர்கள் செப்டம்பர் 29,2024 ஞாயிறு அன்று சபை நிறுவனர்கள் விழாவை கொண்டாடினார்கள். அன்றைய தின சிறப்பு நிகழ்வாக வின்செண்டியர்கள் காணிக்கைப் பவனியில் கலந்து கொண்டனர். மன்றாட்டுகள் மற்றும் அன்றைய திருவிவிலிய வாசகங்கள் உறுப்பினர்களால் வாசிக்கப்பட்டது. திருப்பலிக்கு இடையில் உறுப்பினர்கள் உறுதிமொழி புதுப்பித்துக் கொண்டனர். திருப்பலி முடிந்தவுடன் பங்கு மக்கள் அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. நிகழ்வுகளை தொடர்ந்து சகாய மாதா உறவியத்தைச் சார்ந்த நோயாளி ஒருவருக்கு ரூபாய் 10000 ஆன்ம ஆலோசகர் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் நோயாளியின் வீட்டில் சென்று கொடுக்கப்பட்டது. நிகழ்வுகளை கிளை சபை தலைவர்கள் ஒருங்கிணைத்து வழிநடத்தினர்.

## தக்காளிவிளை கிளைச்சபைகள்

புனித வின்செண்ட் தே பவுல் திருநாள் கொண்டாட்டம் தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயத்தில் செயல்படும் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர் கிளைச்சபைகள் இணைந்து செப்டம்பர் 29, 2024 அன்று அனுசரித்தது. உறுப்பினர்கள் அனைவரும் திருப்பலியில் கலந்து கொண்டதோடு காணிக்கை பவனி, மன்றாட்டு, உறுதிமொழி புதுப்பிப்பு ஆகியவற்றில் சிறப்பாக கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் பங்கு மக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

தகவல் சேகரிப்பு
திரு ஷாஜி D P

# மறைமாவட்டச் செய்திகள்

## திருத்தொண்டுத் தளக் கூட்டம்

22 அக்டோபர் 2024, விருதுநகர் புனித சூசையப்பர் திருத்தொண்டு ஆலயத்தில் விரிவாக்கப்பட்ட திருத்தொண்டுத் தளக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் 7 அருட்தந்தையர் மற்றும் 8 அருட்சகோதரிகள் உட்பட 17 பேர் கலந்து கொண்டனர். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பரம்பில் தலைமை வகித்தார். ஒரு மணி நேரம் ஆராதனை மற்றும் ஒப்புரவருட்சாதனமும் நடைப்பெற்றது. அருட். டோபின் ஆலபுரக்கல் அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார். அனைவரும் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அத்தோடு பணிகளில் தற்போதைய நிலை மற்றும் சவால்கள் குறித்து விவாதங்கள் நடைபெற்றன.

## அருட்தந்தையர்களுக்கான கூட்டம்

அக்டோபர் 25, 2024 , ஆறுகாணி - களியல் - மஞ்சாலுமூடு மறைவட்டங்களுக்கான மறைவட்ட அளவிலான அருட்தந்தையர் கூட்டம், மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி தேவாலயத்தில், காலை 10:00 மணிக்கு ஆராதனையுடன் தொடங்கியது. கியூரியா பிரதிநிதியாக குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துபரம்பில் கலந்து கொண்டார். அக்டோபர் 28, 2024 அன்று நாகர்கோவில் புனித அல்போன்சா ஆலயத்தில் வைத்து சூசைபுரம் மற்றும் தக்கலை-பிலாங்காலை மறைவட்ட அருட்தந்தையர் கூட்டமும் படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயத்தில் வைத்து நித்திரவிளை படந்தாலுமூடு மறைவட்ட அருட்தந்தையர் கூட்டமும் நடைபெற்றது. மறைமாவட்ட கியூரியா பிரதிநிதிகளாக பேரருட்தந்தை தாமஸ் பவத்துபரம்பில் மற்றும் பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் கலந்து கொண்டார்கள். முக்கியமாக CML பேரணி, மறைமாவட்ட தினக்கொண்டாட்டம், ஜெபமாலைப்பவனி, மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா, மறைவட்ட அருட்தந்தையர்களின் கடமை மற்றும் பொறுப்பு, கல்லுவிளை சீனாய் இல்லத்தின் மாதாந்திர தியானம், கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களின் வருகை மற்றும் க்யூரியாவிற்கான ஆலோசனைகள் பற்றிய கலந்துரையாடல்கள் ஆகியவை நடைபெற்றன.

## புதிய பேராயர் மார் தாமஸ் தறையில்

2024 அக்டோபர் 31 அன்று, ஐந்தாவது பேராயராகவும், சங்னாச்சேரி உயர்

மறைமாவட்டத்தின் ஒன்பதாவது தலைவராகவும் பேராயர் மார் தாமஸ் தறையில் சங்ஙனாச்சேரியில் அமைந்துள்ள புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற விழாவில் பதவியேற்றார். சீரோ மலபார் திருச்சபையின் தலைவர் உயர் பேராயர் மார் ராஃபேல் தட்டில், முன்னாள் உயர் பேராயர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி பதவி நிறைவு செய்யும் பேராயர் மார் ஜோசப் பெரும்தோட்டம் மற்றும் பாலை மறைமாவட்ட ஆயர் மார் ஜோசப் கல்லரங்நாட்டு, தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் என பல ஆயர்கள் இதில் கலந்து கொண்டனர்.

நமது மறைமாவட்டத்திலிருந்து அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் விழாவில் பங்கேற்றனர்.

---

# அருட்சகோதரர்களிடமிருந்து

இறைவனின் அருளால் அருட்சகோதரர்கள் அனைவரும் நலமாக உள்ளார்கள். அனைவரும் விடுமுறை முடிந்து மீண்டும் குருத்துவக் கல்லூரிகளுக்கு திரும்பினர். சகோதரர் காட்வின் மேய்ப்புப்பணி ஊழியத்திற்கு செல்கிறார். மங்கலப்புழா குருமடதின் ஆலயம் புதுப்பிக்கும் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. குந்நோத் உயர் குருமடதில் இரண்டாம் பருவ வகுப்புகள் அக்டோபர் 16ஆம் தேதி முதல் தொடங்கியது. அக்டோபர் 18 அன்று திருதொண்டர்களுக்கு பிரிவு உபசரிப்பு விழா நடைபெற்றது.

களப்பயிற்சி பெறும் அருட்சகோதரர்களுக்கு அக்டோபர் 25-26 தேதிகளில் மாதாந்திர தியானம் நடைபெற்றது. அவர்களின் இடமாற்றம் நவம்பர் 3 ஆம் தேதி திட்டமிடப்பட்டுள்ளது. உரோமையில் பயிலும் சகோதரர்கள் இந்த மாதத்தை திருத்தொண்டு மாதமாகவும் ஜெபமாலை மாதமாகவும் கொண்டாடுகின்றனர். இம்மாதம் முதலாம் தேதி நற்கருணைக் கொண்டாட்டத்துடன் மறைபரப்பு மாதத்தை ஆரம்பித்தனர். அக்டோபர் 15 ஆம் தேதி முதல் அதிகாரப்பூர்வமாக கல்வியாண்டு தொடங்கியது. மேலும், இந்த நாளில் பசிலிக்கா மேஜர் மேரியில் நடைபெற்ற புனித ஜெபமாலையை வழிநடத்தும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. அக்டோபர் 17ஆம் தேதி, நற்செய்தி அறிவிப்பு பணிகளை ஒப்புக்கொடுத்து திருப்பலி நடைபெற்றது. அன்று நற்செய்தி பணிக்காக பணம் சேகரிக்கப்பட்டது. அந்த வாரத்தின் கடைசி நாட்களில் மாதாந்திர தியானம் நடைபெற்றது. ரூகாலயா உயர் குருமடத்தில் தேர்வுகள் முடித்து 16-28 வரை ஒரு அனுபவப் பயிற்சிக்கு (villege exposure programme) நடைபெற்றது.

*சகோ பிபின் & வின்சிலின்*

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

செபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் 21, 2024 முதல் அக்டோபர் 26, 2024 வரை மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதை தொடர்ந்து செபமாலையும் நடைபெற்றது. அக்டோபர் 13, 2024 அன்று வின்சென்ட் தே பவுல் விழாவை முன்னிட்டு வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர்கள் திருப்பலி சிறப்பித்தார்கள். அக்டோபர் 20, 2024 அன்று மறைபரப்பு ஞாயிறை முன்னிட்டு மிஷன்லீக் மாணவர்கள் திருப்பலி சிறப்பித்தார்கள். அக்டோபர் 27, 2024 அன்று பொதுமன்றம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கைக்காரர்கள் மற்றும் கணக்கருக்கான தேர்தல் நடைபெற்றது.

### புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

தெற்றியோடு புனித பவுல் ஆலய திருவிழாவானது அக்டோபர் 13, 2024 முதல் அக்டோபர் 20, 2024 வரை எட்டு நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் மாலை 6:30 மணிக்கு பங்குத்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் திருக்கொடியேற்றினார்கள். ஒவ்வொரு நாளும் மாலை 5:30 மணிக்கு செபமாலையும் 6:00 மணிக்கு நவநாள் செபமும், அதைத்தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது. இரண்டாம் நாள் திருப்பலிக்கு பின் நற்செய்தி பெருவிழாவும், ஐந்தாம் நாள் நற்கருணை ஆராதனையும், ஆறாம் நாள் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும், ஏழாம் நாள் திருப்பவனியும் நடைபெற்றது. எட்டாம் திருவிழாவான ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு பேரருட்தந்தை தாமஸ் சத்தியநேசன் தலைமையில் ராசா திருப்பலி நடைபெற்றது. அன்றைய தினம் மாலை 5 மணிக்கு செபமாலையைத் தொடர்ந்து திருக்கொடி இறக்குதல் மற்றும் மறைக்கல்வி ஆண்டு விழாவும் நடைபெற்றது.

### புனித மத்தேயு ஆலயம் – அண்ணிக்கரை

அண்ணிக்கரை புனித மத்தேயு ஆலய திருவிழாவானது செப்டம்பர் 29, 2024 முதல் அக்டோபர் 6, 2024 வரை எட்டு நாட்கள் நடைபெற்றது. செப்டம்பர் 29 அன்று மாலை 6 மணிக்கு பங்குதந்தை சுமேஷ் வள்ளியாம் தடத்தில் அவர்கள் திருக் கொடியேற்றினார்கள். அதைத் தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் மாலை 5:30 மணிக்கு ஜெபமாலையும், 6:00 மணிக்கு நவநாள் செபமும், அதைத்தொடர்ந்து ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது. முதல் நான்கு நாட்கள் மாலை 7:30 மணிக்கு நற்செய்தி பெருவிழா நடைபெற்றது.

மூன்றாம் நாள் திருப்பலி மாலை 6:00 மணிக்கு தக்கலை மறை மாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஐந்தாம் நாள் 8:00 மணிக்கு WIPSOUL MEGA SHOW வும் நடைபெற்றது. ஆறாம் நாள் உறவியங்கள் மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும், ஏழாம் நாள் ஆடம்பரத்திருப்பவனியும் இறுதி நாளான அக்டோபர் 6, 2024 அன்று காலை 10:30 மணிக்கு ராசை திருப்பலி மற்றும் அன்பின் விருந்தும் நடைபெற்றது. மேலும் மாலை 6:00 மணி மணிக்கு திருக்கொடி இறக்குதல் அதைத்தொடர்ந்து மறைக்கல்வி ஆண்டு விழாவும் நடைபெற்றது.

## தக்கலை பிலாங்காலை

### புனித அல்போன்சா திருத்தலம் – நாகர்கோவில்

ஜெபமாலை அன்னையின் மாதத்தை முன்னிட்டு, அக்டோபர் 31ஆம் தேதி நாகர்கோவில் புனித ஆல்போன்சா திருத்தலத்தில் ஜெபமாலை பேரணி நடைபெற்றது. அதில் பங்கு மக்கள் மட்டும் அல்லாமல் ஏராளமனோர்கள் பங்கு கொண்டனர். அக்டோபர் மாதம் முழுவதும் குடும்பங்கள் மற்றும் உறவிய அளவில் 31 நாட்கள் தொடர்ந்து ஜெபமாலை செபிக்கப்பட்டது. இந்த மாதத்தில் தினமும் நான்கு மறை உண்மைகளும் செபிக்கப்பட்டன.



### புனித ஜார்ஜியார் ஆலயம் – ஆனையடி

ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் மாதத்தில் ஒவ்வொரு நாளும் மாலையில் அருட்சகோதரிகள் சார்பில் வீடுகளிலும், அருட்சகோதரிகள் இல்லத்திலும் 5 நாட்களும் ஆலயத்தில் 5 நாட்களும் ஜெபமாலை நடைபெற்றது. கடைசி நாளன்று இளைஞர்கள் சார்பில் சிறப்பிக்கப்பட்டது. ஆலயத்தில் நடைபெற்றபோது இனிப்பு வழங்கப்பட்டது. மிஷன் ஞாயிறு அன்று உணவு திருவிழா மாணவர்கள் சார்பில் நடைபெற்றது.

### புனித சவேரியார் ஆலயம் – கைசாலவிளை

ஜெபமாலை மாதத்தில் 5 நாட்கள் ஆடம்பர ஜெபமாலை மற்றும் திருப்பலி சிறப்பிக்கப்பட்டது. கடைசி நாள் குழந்தைகள் புனிதர்கள் வேடமணிந்து சிறப்பித்தனர். இளைஞர்கள் சார்பில் ஆலய கல்லறைத் தோட்டம் சுத்தம் செய்யப்பட்டது.

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி தொடர்ந்து ஆராதனை நடைபெற்றது. அக்டோபர் 10ஆம் தேதி பங்குதந்தையின் குருத்துவ அருட்பொழிவின் வெள்ளிவிழா அவருடைய சொந்த பங்கில் நடைபெற்றது. பங்கிலிருந்து பங்கு மக்கள் கலந்து கொண்டனர். செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 6 வரை 10 நாட்கள் திருவிழா கொண்டாடப்பட்டது. அக்டோபர் 20ஆம் தேதி மறைபரப்பு ஞாயிறை முன்னிட்டு மிஷன் லீக் மாணவர்கள் திருப்பலி சிறப்பித்து உணவுத் திருவிழா மற்றும்



விளையாட்டுகள் நடத்தினர். அன்றைய தினம் வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர்களும் சிறப்பித்து காணிக்கை பவனியில் கலந்து கொண்டனர். அக்டோபர் 24ஆம் தேதி மாலை 6 மணிக்கு திருப்பலி அதைத் தொடர்ந்து மறைமாவட்ட தின ஆயத்த ஆராதனை 1 மணி நேரம் நடைபெற்றது. 27ஆம் தேதி மறைமாவட்ட அளவில் நடந்த ஜெபமாலை பவனியில் பங்குதந்தை மற்றும் 20 நபர்கள் கலந்து கொண்டனர். 31ஆம் தேதி ஆலயத்தில் காலை 6 மணிக்கு ஆராதனை, ஜெபமாலை தொடர்ந்து திருப்பலி நடைபெற்றது. அக்டோபர் மாதம் ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு ஒவ்வொரு உறவியங்களிலும் ஜெபமாலை பவனி நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் காலை 6 மணி ஆராதனை காலை ஜெபம் திருப்பலி நடைபெற்று வருகிறது. இரண்டாவது செவ்வாய்க்கிழமை பரிந்துரை ஜெபம் நடைபெற்று வருகிறது. 27ஆம் தேதி இளைஞர்கள் திருப்பலி சிறப்பித்து 30ஆம் தேதி இரவு 8 மணிக்கு

ஆலயத்தில் ஜெபமாலை பவனி நடத்தினர். அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை மற்றும் பங்கு பேரவையினர் முன்னின்று நடத்தி வருகின்றனர்.

## சூசைபுரம்

### புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்



அக்டோபர் 1, 2024 உறவிய ஆண்டு விழா திருப்பலி மற்றும் அதனைத் தொடர்ந்து கொண்டாட்டங்கள் அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில் அவர்களது தலைமையில் உறவிய மக்களின் பல் வண்ண கலை நிகழ்வுகளோடு நடைபெற்றது.

ஜெபமாலை மாதமான அக்டோபர் மாதத்தை சிறப்பிக்கும் விதமாக அக்டோபர் 2, 2024 அன்று திருப்பலிக்கு பின்னர் அன்னையின் சொரூபமானது ஒவ்வொரு வீடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு, மாதம் முழுவதும் ஒவ்வொரு வீடுகளிலும் வைக்கப்பட்டு ஜெபிக்கப்பட்டது. அக்டோபர் 6, 2024 அன்று மிஷன் லீக் இயக்கத்தை திருமதி. அஜிதா அவர்கள் பார்வையிட்டார். அக்டோபர் 18, 2024 அன்று மறைமாவட்ட நற்செய்தி பெருவிழாவிற்கு ஆயத்தமான நற்செய்தி பகிர்வு மாலை திருப்பலிக்கு பின்னர் அருட்தந்தை அனில்ராஜ் அவர்களால் நடத்தப்பட்டது. அக்டோபர் 20, 2024 அன்று மறைபரப்பு ஞாயிறு திருப்பலியினை மிஷன் லீக் மாணவர்கள் சிறப்பித்தனர். மறைக்கல்வி மாணவர்களுக்கான பங்கு அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்பட்டன. மாதர் ஜோதிஸ் இயக்கமானது திருமதி. ஜெனிற்றா அவர்களால் பார்வையிடப்பட்டது. அக்டோபர் 27, 2024 - இளையோர்களின் பாதுகாவலர் புனித இரண்டாம் ஜாண் பால் அவர்களின் திருவிழாவானது இளையோர்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய திருப்பலியினை இளையோர்கள் சிறப்பித்தனர். அக்டோபர் 31, 2024 அன்று ஜெபமாலை மாதத்தின் இறுதி நாள் திருப்பலிக்குப்

பின்னர் ஆலயத்தைச் சுற்றிலும் ஜெபமாலைப் பவனி நடத்தப்பட்டது.

### புனித தோமையார் ஆலயம் – மாதாபுரம்

அக்டோபர் 6, 2024 புனித குழந்தை தெரேசா உறவிய ஆண்டு விழா திரு. கிறிஸ்து தாஸ் அவர்களது இல்லத்தில் வைத்து அருட். சந்தோஷ் தலைமையில் ஜெபமாலை புனித குழந்தை தெரேசா நவநாள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டன. மிஷன் லீக் பிள்ளைகள் சிறப்பு காணிக்கை செலுத்தினர். அக்டோபர் 11இல் குழந்தை ஈசோ இயக்க பிள்ளைகள் ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு நோயாளியை வீட்டில் சந்தித்து ஜெபமாலை ஜெபித்து வந்தனர். அக்டோபர் 17 முதல் அக்டோபர் 27 வரை குருசடியில் மாலை 5.30 மணிக்கு ஜெபமாலை நடைபெற்றது. அக்டோபர் 27 இன்று துணை பங்கு தந்தை ஆன்றணி அவர்கள் தலைமையில் இளைஞர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

### புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

அக்டோபர் 1, 2024 புனித குழந்தை தெரேசா திருநாள் முன்னிட்டு திருப்பலி அதை தொடர்ந்து ஆடம்பரப்பவனி அருட்தந்தை டோஜி தலைமையில் மிஷன் லீக் பிள்ளைகளால் நடத்தப்பட்டது. 1ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை



உறவியங்களிலும் இளைஞர் இயக்கம் சார்பாக இளையோர்கள் இல்லத்திலும் ஜெபமாலை நடத்தப்பட்டன. அக்டோபர் 6, 2024 அன்று புனித குழந்தை தெரேசா உறவிய ஆண்டு விழா திரு. ஜாண்றோஸ் அவர்களது இல்லத்தில் வைத்து பங்குத்தந்தை தலைமையில் ஜெபமாலையுடன் ஆரம்பிக்கபட்டு கலைநிகழ்ச்சிகளுடன் நடபெற்றது. இறுதியில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. அக்டோபர் 13, 2024 அன்று காலை 5.15 மணிக்கு இளையோர்களுக்காக திருப்பலி நடைபெற்றன. அதை தொடர்ந்து இளையோர்கள்

சார்பாக உணவுத் திருவிழா மிஷன் லீக் பிள்ளைகள் சார்பாக விளையாட்டு போட்டி போன்றவை நடத்தப்பட்டன. அக்டோபர் 20, 2024 அன்று 2.00 மணிக்கு பங்கு தந்தையின் தலைமையில் பங்கு பேரவை நடைபெற்றது.

### பாத்திமா அன்னை ஆலயம் – பாத்திமாபுரம்

பாத்திமா அன்னை ஆலயத்தில் அக்டோபர் 3, 2024 அன்று மறைமாவட்ட அளவிலான நற்செய்தி பெருவிழாவை முன்னிட்டு அருட்தந்தை ஷாஜன் நெட்டபொங்கு அவர்களால் ஆடம்பரத் திருப்பலி, தியானம் மற்றும் நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது. அக்டோபர் 4, 2024 முதல் வெள்ளிக்கிழமை அன்று திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை ஒப்புரவு அருட்சாதனம் நடைபெற்றது. அக்டோபர் 20, 2024 அன்று மிஷன் ஞாயிற்றை மிஷன் லீக் மாணவர்கள் சிறப்பிதனர். அன்றைய தினம் மிஷனில் பணி புரிபவர்களுக்காக திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது. அக்டோபர் மாதத்தின் அனைத்து நாட்களிலும் ஜெபமாலை ஜெபிக்கப்பட்டது. இறுதிநாளன்று மாலையில் ஆடம்பர திருப்பலி ஜெபமாலை பவனி நடைபெற்றது. பவனி முடிந்த பிறகு மரியாயின் சேனை உறுப்பினர்களால் இனிப்பு வழங்கப்பட்டது.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

அக்டோபர் மாதம் தொடக்கத்தில் எட்டு நாட்கள் உறவியங்களில் தலா ஒரு நாள் வீதம் வீடுகள் தோறும் ஜெபமாலைப் பவனி நடைபெற்றது. அக்டோபர் 22 முதல் 31 வரை தினமும் மாலை 5:30 மணிக்கு ஆலயத்தில் வைத்து சிறப்பு ஜெபமாலையும் திருப்பலியும் நடைபெற்றது. நிறைவு நாளான 31ஆம் தேதி திருப்பலியை தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. அக்டோபர் இரண்டாம் தேதி மிஷன் லீக் மாணவ மாணவியரும் 6 ஆம் தேதி அன்னையர் இயக்கமும் 27ஆம் தேதி இளையோர் இயக்கமும் திருப்பலியை சிறப்பித்தனர். இளையோர் இயக்கம் சார்பில் இணையம் வழியாக வினாடி வினாப் போட்டியும் நடைபெற்றது. அக்டோபர் மூன்றாம் தேதி புனித பிரான்சிஸ் சவேரியார் உறவிய ஆண்டு விழாவும் 4ஆம் தேதி புனித ஜேம்ஸ் உறவிய ஆண்டு விழாவும் நடைபெற்றது. 6ஆம் தேதி ஆலய கட்டுமான பணிக்காக பிரிவிற்கு வந்த பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலய பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்கள் வரவேற்கப்பட்டதோடு சுமார் 1 லட்சம் அளவில் ரூபாய் உறவியங்கள் சார்பில் பிரித்து வழங்கப்பட்டது.

13 ஆம் தேதி புனித வின்சென்ட் தே பவுல் சபை சூசைபுரம் வட்டார சபையின் ஆண்டு விழா பங்கில் வைத்து நடைபெற்றது. 17 ஆம் தேதி மாதாந்திர தியானமும் 20 ஆம் தேதி மிஷன் ஞாயிறும் பங்கில் அனுசரிக்கப்பட்டது. மறைக்கல்வி மாணவ மாணவியர் அனைத்து வீடுகளுக்கும் சென்று ஜெபித்து

பொருள் பிரிவையும் பெற்று வந்தனர். 27ஆம் தேதி குலசேகரத்தில் நடைபெற்ற மரியாயின் சேனை ஜெபமாலைப் பவனியில் பங்கிலிருந்து சுமார் 75 பேர் பங்கேற்றனர். அன்றைய தினம் கல்லறைத் தோட்ட குருசடி சார்பில் நடைபெறும் சிறு சேமிப்பில் கிடைத்த லாபத் தொகை ரூபாய் 23195 பங்கு தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டது.

### தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

அக்டோபர் 13, 2024 அன்று வின்சென்ட் தே பவுல் மறைவட்ட ஆண்டு விழா பாலப்பள்ளத்தில் நடைபெற்றது. அதில் வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். அக்டோபர் 20, 2024 அன்று மறைபரப்பு ஞாயிறை முன்னிட்டு மிஷின்லீக் மாணவர்கள் திருப்பலி சிறப்பித்தார்கள். செபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் 21, 2024 முதல் அக்டோபர் 30, 2024 வரை மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதை தொடர்ந்து செபமாலையும் நடைபெற்றது. கடைசி நாள் மாலை 6 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் அதை தொடர்ந்து செபமாலையும் நடைபெற்றது. மேலும் இரவு உணவானது மரியாயின் சேனை உறுப்பினர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சூசைபுரம் மறை வட்டத்தில் உள்ள அனைத்து அருட்தந்தையர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அக்டோபர் 27, 2024 அன்று நடைபெற்ற மரியாயின் சேனையின் மறைமாவட்ட செபமாலை பவனியில் மரியாயின் சேனை உறுப்பினர்களுடன் இணைந்து பங்கு மக்களும் கலந்து கொண்டார்கள். அக்டோபர் 27, 2024 அன்று இளையோர் இயக்க பாதுகாவலர் தினத்தை கொண்டாடும் விதமாக இளையோர்களால் திருப்பலி சிறப்பிக்கப்பட்டது. மேலும் திருப்பலிக்குப்பின் பங்கு மக்கள் அனைவருக்கும் இளையோர் இயக்கம் சார்பாக இனிப்பு வழங்கப்பட்டது. அதன்பின் பங்குதந்தையுடன் இணைந்து இளையோர்கள் அனைவரும் ஜீவன் ஜோதி முதியோர் இல்லத்திற்கு சென்று அவர்களுடன் உரையாடி இனிப்புகள் வழங்கினார்கள். அக்டோபர் 30, 2024 அன்று காலை 4 மணியளவில் 40 மணி நேர ஆராதனை தொடங்கப்பட்டது. இதில் பங்கு மக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

## களியல்

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலய மிஷன் லீக் இயக்கம் சார்பாக இயக்கத்தின் விண்ணக பாதுகாவலர் புனித குழந்தை தெரசாள் திருவிழா, 2024, அக்டோபர் 02 அன்று நடைபெற்றது. மாலை 5.30 மணிக்கு செபமாலையும், திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. ஆராதனை நிகழ்வுகளை மாணவர்கள் முன்னின்று வழிநடத்தினர்.

புனித குழந்தை தெரசாள் திருவிழாவை முன்னிட்டு மறைக்கல்வி மாணவர்களின் கலைநிகழ்வுகள் அக்டோபர் 06, ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்குபின் நடைபெற்றது. பங்குதந்தை ஜெஸ்டின் சுதீஷ் தலைமை தாங்கினார். தலைமையாசிரியர் திரு. பிபின் முன்னிலை வகித்தார். மாணவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் முன்னின்று வழிநடத்தினர். மறைமாவட்டதினத்தை முன்னிட்டு சிறப்பு நற்கருணை ஆரதானை அக்டோபர் 15 அன்று நடைபெற்றது. மாலை 5.30 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து சிறப்பு ஆராதனையும் நடத்தப்பட்டது. மறைபரப்பு ஞாயிறு கொண்டாட்டம் 2024 அக்டோபர் 20 அன்று காலை திருப்பலிக்கு சிறப்பு காணிக்கை பவனியும், அதைத்தொடர்ந்து மிஷன் லீக் கொடி பவனியாக எடுத்துச்செல்லப்பட்டு, கொடியேற்றப்பட்டு மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வுகளை மிஷன் லீக் இயக்க மாணவர்கள் தலைமையேற்று வழிநடத்தினர். செபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் 21 முதல் 31 வரையுள்ள நாட்களில் மாலை 5.00 மணிக்கு செபமாலை மற்றும் திருப்பலி நடைபெற்றது. இறுதி நாளாகிய அக்டோபர் 31 வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு செபமாலையும், திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

## மஞ்சாலுமூடு

### ▶ திருகுடும்ப ஆலயம் – முக்கூட்டுகல்



திரு குடும்ப ஆலயம் முக்கூட்டு கல்லில் ஜெபமாலை அன்னையின் பெருவிழா கொண்டாடப்பட்டது. கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அனைத்து வீடுகளிலும் அன்னையின் திரு உருவம் கொண்டு செல்லப்பட்டு ஜெபமாலை ஜெபிக்கப்பட்டது. பின்னர் அக்டோபர் 31, 2024 அன்று ஆலயத்தில் ஆடம்பரமாக ஜெபமாலை சொல்லி ஜெபித்து கொண்டாட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## நித்திரவிளை

### ▶ புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

அக்டோபர் 3, 2024, முதல் வியாழக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர் ஜெபமாலை மற்றும் அதனை தொடர்ந்து திருப்பலி திவ்ய நற்கருணை ஆராதனை ஆகியவை நடைபெற்றன. தொடர் ஜெபமாலையை உறவியம் வாயிலாக மக்கள் சிறப்பித்தனர். அக்டோபர் 21 முதல் 30 வரை 10 நாட்கள் ஜெபமாலையும் திருப்பலியும் நடைபெற்றது. 31ஆம் தேதி அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் திருப்பலி ஒப்புக் கொடுத்து இறை வார்த்தை

பகிர்வு நடத்தினார். இத்திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் மறை மாவட்ட தினத்தையும் நற்செய்தி பெருவிழாவையும் சிறப்பிக்கும் நோக்குடன் நடத்தப்பட்டது. 20ஆம் தேதி மறைபரப்பு தினத்தை முன்னிட்டு திருப்பலி மற்றும் காணிக்கைப் பவனி மிஷன்லீக் உறுப்பினர்கள் சிறப்பித்தார்கள். இதை துணை இயக்குனர் சிஸ்டர் கிறிஸ்டின் எஸ்டி அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார். 26 ஆம் தேதி மாலை 3 மணிக்கு துணை இயக்குனர் சிஸ்டர் அவர்கள் தலைமையில் திருமதி. மினிமோள் திருமதி. மினி ஏஞ்சல் ஆகியோர் மாதர்ஜோதிஸ் இயக்கத்தை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்தனர். சுமார் 20 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அக்டோபர் ஒன்றாம் தேதி புனித குழந்தை தெரசா திருநாள் மிஷன்லீக் உறுப்பினர்களால் சிறப்பிக்கப்பட்டது.

### புனித அந்தோனியார் ஆலயம் – வயலங்கரை

அக்டோபர் 3, 2024 அன்று ஓய்வு நாள் ஈசோவுடன்(Holiday with Jesus) என்ற நிகழ்வு குழந்தை இயேசு இயக்கம் சார்பில் காலை திருப்பலியுடன் தொடங்கி வகுப்பு, செய்கை பாடல், விளையாட்டு, மதிய உணவு, முஞ்சிறை முதியோர் இல்லம் (அன்பகம்) சந்திப்பு, இறுதியில் 4 மணிக்கு தேநீர் விருந்து என்ற நிகழ்வுகளுடன் நடைபெற்றது. வீடுகளுக்குச் சென்று நோயாளிகளையும்



அன்றைய தினம் சந்தித்தனர். அக்டோபர் 1, அன்று புனித குழந்தை தெரசா உறவிய ஆண்டு விழா நடைபெற்றது. அக்டோபர் 26ஆம் தேதி திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்கள் திருநாளை இளையோர் இயக்கம் சிறப்பித்து, பயனாளிகளுக்கு வாழைக்கன்று வழங்கி மகிழ்ந்தனர். அக்டோபர் 31ஆம் நாள் திருப்பலி மற்றும் ஜெபமாலைப் பவனி நடைபெற்றது. 27ஆம் தேதி காலை திருப்பலிக்கு பின் மாதர் ஜோதிஸ் இயக்கத்தை திருமதி மினி மோள் மற்றும் மினி ஏஞ்சல் ஆகியோர் பார்வையிட்டனர்.

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்

அக்டோபர் மாதம் முழுவதும் அன்னையின் மேல் பக்தியையும் வணக்கத்தையும் எடுத்துக் கூறும் வகையில் 31 நாட்கள் மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பில் ஆடம்பர ஜெபமாலை மற்றும் 31 ஆம் நாள் சிறப்பு ஜெப வழிபாடு நடைபெற்றது. இருபதாம் தேதி காலை திருப்பலிக்கு பின் மாதர் ஜோதிஸ் இயக்கத்தை திருமதி மினி அவர்கள் பார்வையிட்டார்.

### ▶ புனித அமல மரியா ஆலயம் – சீனிவளை

அக்டோபர் முதல் நாள் புனித குழந்தை தெரசா திருநாள் மிஷன்லீக் உறுப்பினர்கள் சார்பில் கொண்டாடப்பட்டது. 20ஆம் தேதி மறைபரப்பு ஞாயிறு அன்று மிஷன் லீக் உறுப்பினர்கள், கொடியேற்றி உறுதிமொழி எடுத்து தங்களின் விசுவாசத்தை பகிர்ந்து கொண்டனர். பின் வீடுகள் சந்தித்து காணிக்கை சேகரித்தனர். 29, 30, 31 ஆகிய நாட்கள் திருப்பலி, ஜெபமாலை மற்றும் நற்கருணை ஆராதனை நடைபெற்றது.

### ▶ புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

அக்டோபர் 1, அன்று மிஷன்லீக் இயக்கத்தின் பாதுகாவலியாம் புனித குழந்தை தெரசா திருநாள் மாலை ஐந்து முப்பது மணிக்கு திருப்பலியுடன் சிறப்பிக்கபட்டது. இரண்டாம் தேதி பங்களவில் மாணவர்களுக்கு சிறப்பு கருத்தரங்கு காலை 9.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை நடைபெற்றது. இந்நிகழ்வை அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அருட்தந்தை ஆண்டனி தகடியேல் ஆகியோர் வழிநடத்தினர். 13ஆம் தேதி புனித வின்சென்ட் தே பவுல் சபையின் வட்டார சபை ஆண்டு விழா மதியம் 2:30 மணிக்கு நடைபெற்றது. 20ஆம் தேதி மறைபரப்பு தினத்தை ஒட்டி திருப்பலிக்கு பின் மிஷன்லீக் இயக்கம் சார்பாக அருட்தந்தை ஆண்டனி தகடியேல் அவர்கள் கொடியேற்றி உறுதிமொழி எடுத்து சிறப்பித்தார்கள். பிறகு பிறரன்புப்பணியை மையப்படுத்தி மாணவர்கள் வீடு சந்திப்பு நடத்தி, ஜெபித்து, காணிக்கை பொருட்கள் சேகரித்தனர். ஜெபமாலை மாதம் முன்னிட்டு ஒன்றாம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை உறவியம் அடிப்படையில் வீடுகளில் ஜெபமாலை நடத்தி ஜெபித்தனர். 27 ஆம் தேதி மாதர் ஜோதிஸ் சார்பில் நடத்தப்பட்ட உணவு திருவிழாவிற்காக நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்து ஜெபித்தனர். அன்றைய தினம் இயக்கத்தை பார்வையிட திருமதி. சினேகலதா அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

மிஷன் லீக் மாணவர்கள் தாங்கள் தயாரித்து வைத்திருந்த ஜெப மாலைகளை அன்றைய தினம் பெற்றோர்களுக்கு பரிசாக வழங்கி அவர்கள் கரங்களால் ஆசீர் பெற்றுக் கொண்டனர்.

### ஜெயமாதா மறைவட்ட ஆலயம் – நித்திரவிளை

20 ஆம் தேதி மாதர்ஜோதிஸ் இயக்கம் சார்பில் "அஞ்சாதே" என்னும் தலைப்பில் விவிலிய வசனம் எழுதும் போட்டி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மாலை 3 மணி அளவில் மாதர் ஜோதிஸ் இயக்கத்தை திருமதி. சினேகலதா அவர்கள் பார்வையிட்டார்கள். 22ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை 9 நாட்கள் மாலை திருப்பலியும் சிறப்பு ஜெபமாலையும் வழிபாடும் நடைபெற்றது.

## தென்காசி மறைத்தளச் செய்திகள்

### புளியரை ஆலயத்திருவிழா

புளியரை ஆலய திருவிழாவானது 2024 அக்டோபர் மாதம் ஒன்று முதல் ஆறாம் தேதி வரை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அருட்தந்தை டென்சி முண்டுநடைய்க்கல் அவர்கள் கொடி ஏற்றி திருவிழாவை துவங்கி வைத்தார். முதல் மூன்று நாட்கள் அருட்தந்தை மிஜோ அவர்கள் தியான உரை வழங்கினார்கள். பக்த இயக்கங்களின் ஆண்டு விழா குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளுடன் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இறுதி நாளில் ஆடம்பரத் திருப்பலியுடன் கொடி இறக்கப்பட்டு அன்பு விருந்துடன் திருவிழா இனிதே நிறைவுற்றது.

### மறைக்கல்வி எழுத்துப் போட்டிகள்

மறைக்கல்வி எழுத்துப் போட்டிகள் அக்டோபர் மாதம் 13ஆம் தேதி மதியம் 1:30 மணி அளவில் புதூர் பள்ளிக்கூடத்தில் வைத்து நடத்தப்பட்டது. அனைத்து பங்குகளிலிருந்தும் மறைத்தளங்களிலிருந்தும் மாணவர்கள் உற்சாகத்துடன் இதில் பங்கேற்றனர்.

### மாதர் ஜோதிஸ் எழுத்து போட்டிகள்

மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான எழுத்துப் போட்டிகள அக்டோபர் மாதம் 13ஆம் தேதி புதூர் பள்ளிக்கூடத்தில் வைத்து நடத்தப்பட்டது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

## MONTHLY AGENDA –NOVEMBER 2024

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | 09.00 am<br>10.00 am<br>10.00 am | **Pastoral Council @ Sangamam SINAI: One Day Retreat @ Vattakottai FA: MathruJyothis General body Meeting @ Kalluvilai** |
| 2 | Sat | 11.00 am<br>02.30 pm | **HEALTH: Palliative Care patients meet @ Kalluvilai CAT: HM Meet @ Kalluvilai** |
| 3 | Sun | 10.00 am<br>02.00 pm<br>02.30 pm<br>03.00 pm<br>03.00 pm<br>04.00 pm | **KII: All Saints day celebration @ parish level CAT: Ist Semester Examination KKSSS: Training with parish council leaders MathruJoythis and Uraviyam leaders @ Christhurajapuram & Mathapuram VC: Central Council Meeting @ Padanthalummoodu SMYM: Forane executives meeting of Manjalmoodu, Kaliyal & Arukani foranes @ Kaliyal Mathru Jyothis Unit Visit LAITY: Central council meeting @ Kalluvilai** |
| 4 | Mon | 04.00 pm<br>04.00 pm | **KKSSS: PRI Meeting @ Kaliyal KKSSS: Community Engagement program @ Vayalinkarai** |
| 5 | Tue | 10.00 am | **SINAI: Intercessory Prayer @ Kalluvilai** |
| 6 | Wed | 10.00 am | **FA: Staff Counseling @DNN Karode** |
| 8 | Fri | 10.00 am | KKSSS: Inter district poster and painting competition |
| 9 | Sat | 05.30 pm | **SINAI: Evening Retreat @ Malaicode** |

| | | | |
|---|---|---|---|
| 10 | Sun | 02.30 pm<br>03.00 pm<br>02.00 pm<br>02.00 pm | **DIOCESAN FOUNDATION DAY PARISH LEVEL CELEBRATION**<br>**VC: Area Council Meeting @ Forane Centers**<br>**SMYM: Forane executives meeting of Soosaipuram & Thuckalay Pilankalai foranes @ Pilankalai**<br>**KKSSS: Training with parish council leaders Mathur Joythis and Uraviyam leaders**<br>**FA: Mathru Jyothis Unit Visit** |
| 11 | Mon | 03.00 pm<br>04.00 pm | **DIOCESAN FOUNDATION DAY**<br>**EC: UCC Monthly Meeting @ Thuckalay**<br>**KKSSS: Family Strengthening Campaign @ Varuthattu** |
| 12 | Tue | **10.00 am** | **SINAI: Intercessory Prayer @ Kalluvilai** |
| 13 | Wed | 10.00 am<br>10.00 am | **KKSSS: Siddha medical camp and class @ Vendalicode FA: Staff Counseling @ DNN Karode** |
| 14 | Thu | 10.00 am | **KKSSS: Children's Day Celebration @ Nithiravilai** |
| 16 | Sat | 10.00 am | **Welcome to His Beatitude Cardinal George Alencherry @ Thuckalay** |
| 17 | Sun | 02.00 pm<br>04.00 pm<br>02.00 pm<br>02.00 pm<br>02.00 pm | **CML: Diocesan Rally @ Thiruthuvapuram**<br>**Addressing His Beatitude Cardinal to faithful at padanthalumoodu**<br>**KII: Unit Vists**<br>**FA: Mathru Jyothis Unit Visit**<br>**KKSSS: Training with parish council leaders MathruJoythis and Uraviyam leaders @ Kulashekaram & Chenamcode** |
| 18 | Mon | 03.00 pm<br>04.00 pm | **EC: UCC Central Meeting @ Karungal**<br>**KKSSS: Family Strengthening Campaign @ Kattathurai** |

| | | | |
|---|---|---|---|
| 19 | Tue | 10.00 am | **SINAI: Intercessory Prayer @ Kalluvilai** |
| 20 | Wed | 10.00 am<br>10.00 am | **KKSSS: Anganwadi Meeting FA: Staff Counseling @DNN Karode**<br>**DIOCESE OF THUCKALAY**<br>**EPARCHIAL MONTHLY AGENDA – NOVEMBER 2024** |
| 23 | Sat | 10.00 am | **SINAI: One Day Retreat @ Vattakottai** |
| 24 | Sun | 02.00 pm<br>02.30 pm<br>02.00 pm<br>02.00 pm<br>02.00 pm | **SMYM: Forane executives meeting of Nithiravilai & Padanthalmoodu foranes @ Padanthalumoodu**<br>**CAT: Bible Fest Diocese Level Writing Competition @ Padanthalumoodu CAT: Tenkasi Bible Fest**<br>**KKSSS: Training with parish council leaders MathruJoythis and Uraviyam leaders @ Kaliyal and Munchirai**<br>**FA : Dance Competition** |
| 25 | Mon | 03.00 pm | **Mission Meet @ Tenkasi** |
| 26 | Tue | 10.00 am<br>10.00 am | **SINAI: Intercessory Prayer @ Kalluvilai**<br>**KKSSS: Motivational Training for Animators @ Kalluvilai** |
| 27 | Wed | 10.00 am | **FA: Staff Counseling @DNN Karode** |
| 29 | Fri | 04.00 pm | **Eparchial Bible Convention @ Padanthalummoodu** |
| 30 | Sat | 04.00 pm | **Eparchial Bible Convention @ Padanthalummoodu** |

# BISHOP'S ENGAGEMENTS – NOVEMBER 2024

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Fri | **09.30 am**<br>**06.00 pm** | **Sangamam : Pastoral Council**<br>**Kazhuvanthittai : Feast day Holy Qurbana** |
| 2 | Sat | 08.45 am<br>10.30 pm | **Thuckalay : Meeting with Regency brothers**<br>**Kalluvilai : KKSSS Palliative Care patients meet** |
| 3 | Sun | 03.00 pm | **Kaduthuruthi : Betrothal** |
| 4-6 | Mon - Wed | | **>> To Chennai** |
| 7-9 | Thu - Sat | | **>> Adilabad Episcopal Installation** |
| 10 | Sun | | **>> Shamshabad Episcopal Installation**<br>**>> Thuckalay** |
| 11 | Mon | 06.00 pm | **Pallikonam : Diocesan day Holy Qurbana Celebration** |
| 12 | Tue | 09.00 am | **Thuckalay : Curia Meeting** |
| 13 | Wed | 06.00 am<br>10.00 am<br>04.00 pm | **Soosaipuram : SABS Provincial House**<br>**Thuckalay : Education Commission Meeting**<br>**Thuckalay : Benefactors' Visit** |
| 14 | Thu | 10.00 am<br>03.00 pm | **Thucakaly : Bishop's House**<br>**Mukkoottukal : Visit to Minor Seminary** |
| 15 | Fri | 10.00 am<br>05.00 pm | **Thuckalay : Bishop's House**<br>**Padanthalummoodu : School Annual Day** |
| 16 | Sat | 11.00 am<br>02.00 pm | **Thuckalay : Welcoming His Beatitude Cardinal George Alencherry**<br>**Paraicode : Blessing of Paraicode Church** |
| 17 | Sun | 02.00 pm<br>06.00 pm | **Thiruthuvapuram : CML Rally**<br>**Azhakiyamandapam : FCC Provincial House** |
| 18-23 | Mon-Sat | | **>> To Guwahati** |

| | | | |
|---|---|---|---|
| 24 | Sun | 09.00 am<br>03.00 pm | **Palappallam : Feast Day Qurbana**<br>**Cristurajapuram : Feast Day Qurbana** |
| 25 | Mon | 10.00 am | **Tenkasi : Mission Meet** |
| 26 | Tue | 10.00 am | **Thuckalay : Departmental Meetings** |
| 27 | Wed | 09.30 am<br>05.00 pm | **Thuckalay : Curia Meeting**<br>**Mankarai : School Annual day** |
| 28 | Thu | 10.00 am<br>04.00 pm | **Thuckalay : Bishop's House**<br>**Soosaipuram : School Annual day** |
| 29 | Fri | 10.00 am<br>04.00 pm | **Thuckalay : Bishop's House**<br>**Padanthalummoodu : Eparchial Bible Convention** |
| 30 | Sat | 04.00 pm | **Padanthalummoodu : Eparchial Bible Convention** |

**Fr. Liju Mathew, Bishop's Secretary**

# தென்காசி – ஜெபமாலை பவனி

ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் நடத்தப்படுகின்ற ஜெபமாலை திருப்பவனி இவ் வருடமும் அக்டோபர் மாதம் 13ஆம் தேதி நடத்தப்பட்டது. ஆயர் அவர்கள் வருகை தந்து ஜெபமாலை பவனியை சிறப்பித்தார். மாலை 4 மணியளவில் புளியரை ஆலயத்தில் தொடங்கி புதூர் புலரி பள்ளிக்கூடத்தில் ஜெபமாலை பவனி நிறைவுற்றது. ஆயர் அவர்கள் அனைவருக்கும் வாழ்த்துரை வழங்கினார். பவனிக்கு தேவையான தேர் தென்காசி மறைத்தளத்தை சார்ந்த இளைஞர்கள் நன்முறையில் தயார் செய்து எடுத்து வந்தனர். அனைத்து பங்குகளிலிருந்தும் இறைமக்கள் அருட்சகோதரிகள், அருட்தந்தையர்கள் என அனைவரும் பவனியில் பங்கெடுத்து இறையாசீர் பெற்று சென்றனர். ஆரியங்காவு புனித மரியன்னை பங்கை சேர்ந்த இளையோர்கள் வருகை தந்து பவனிக்கு தேவையான வாகனம் மற்றும் உணவை அளித்தனர்.



SMYM Anniversary
October 12, 2024, Padanthalumoodu



Catechism Forane level Writing Competition ,
October  13, 2024, Forane Centres



Mathar Jyothi, Forane Level Bible Sentence
Writing , October 20, 2024, Forane Centres




Rosary Procession
October 27, 2024, Mariyayin Senai, Chenamcode-Kulasekharam




Rosary Procession, October 13, 2024,
Tenkasi Mission, Puliyarai-Puthoor

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570